بسم الله الرحمن الرحيم

**Friday Sermon** / வெள்ளிக்கிழமை குத்து.:பா

30 March 2018 (11 Rajab 1439 A H)

# FINANCIAL SACRIFICE - Part 1

## நிதி தியாகம் - பகுதி 1



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

ஸலாமிற்கு பிறகு தஷஹ்ஹீதும், தஅவசும், அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

அல்லாஹ்வின் பாதையில் நிதிபங்களிப்பு பற்றி இன்றைய தினம் நான் பேசிக்கொள்ள எண்ணுகின்றேன். பல்வேறு நாடுகளில் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் அதிகாரபூர்வமாக ரஜிஸ்டர் செய்திருந்தும் பெரும்பான்மையான உறுப்பினர்களும் அல்லாஹ்வின் வழியில் நிதி தியாகம் செய்வதில்லை என்பது மிக மிக வருத்தம் விளைவிக்கும் காரியமாகயிருக்கின்றது. இத்துறையில் எவ்வித முன்னேற்றத்தையும் பார்க்கமுடியவில்லை. ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் மிக சிறுபான்மை உறுப்பினர்கள் மட்டுமே அல்லாஹ்வின் வழியில் நிதி தியாகம் செய்கின்றனர்.

இந்நூற்றாண்டின் கலீ.்.பத்துல்லாஹ்வை அங்கீகரித்துக் கொள்ளவும் மற்றும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் நுழைந்துக் கொள்ளவும் செய்திருந்தும் நிதி தியாகத்தில் சரியான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்பது கவலைக்குரிய காரியம்தான். இச்சூழ்நிலை நிலைநிற்க, இது குறித்து இன்றைய என் பேருரை வாயிலாக வெளிச்சம் அளித்திட நான் எண்ணுகிறேன்.

எல்லா விதமான தேவைகளிலிருந்தும் அல்லாஹ் சுதந்திரமானவன் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவனுக்கு பிறர் உதவியின் தேவையில்லை. ஆனால் நமது எல்லா விதமான தேவைகளுக்கும் நாம் அவன் உதவியை நாடுகின்றோம். நமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஆயிரகணக்கான வழிகளை அவன் திறந்து வைத்துள்ளான். இறைவழியில் செலவு செய்வதன் தேவையையும் மற்றும் மதிப்பையும் குறித்து திருக்குர் - ஆனில் பல்வேறு பகுதிகளில் திரும்ப திரும்ப கூறப்பட்டிருக்கின்றது. மக்கள் அக்காரியத்தை செய்வதன் மூலம், அவர்கள் சுத்தமும் தூய்மையுமாகி விடுகின்றனர். ஒரு இறைபக்தர் இறையச்சத்துடன் முன்னேறிக் கொள்ள, இறைவழியில் செலவு செய்வது ஒரு காரணமாகயிருக்கின்றது. இறைவழியில் செலவு செய்வதன் மூலம் மனிதன் சுயம் சீரமைந்து விடவும் மற்றும் தீய வழிகளிலிருந்து இரட்சிப்பைப் பெற்று விடவும் செய்கின்றான். அத்தகைய தீய வழிகள் ஒருபோதும் மனிதனுக்கு இரட்சிப்பை அளிப்பதில்லை.

நிதி தியாகங்களின் தத்துவத்தை நான் விளக்க விரும்புகின்றேன். திருக்குர் - ஆனில் அல்லாஹ் கூறுகின்றான். **“அல்லாஹ்வின் பாதையில் (பொருளையும் உயிரையும்)செலவு செய்யுங்கள். நீங்கள் உங்கள் கைகளாலேயே**

**உங்களை அழிவிற்காளாக்கிக் கொள்ளாதீர்கள். நன்மை செய்யுங்கள். அல்லாஹ் நிச்சயமாக நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான்".** (2:196)

இது உங்களின் பயனுக்காகவே ஆகும். அல்லாவிட்டால் நீங்கள் இழப்பிற்களாகி விடுவீர்கள். இவ்விஷயத்தில் எனக்கு மிக அதிகமான அனுபவம் இருக்கின்றது. அதற்குட்பட்ட முறையில் செயல்படாமலிருந்தால் பல வகையான தனிபட்ட இழப்பிற்கு மனிதன் ஆளாகி விடுவான். "ஜகாத்" செலுத்துவதை திருக்குர் -ஆன், நிதி தியாகங்களுடன் தொடர்பு படுத்தி கூறியிருக்கின்றது.

திருக்குர் - ஆனின் போதனைகள் படி ஒரு நாட்டின் பொருளாதாரத்துறை முன்னேற்றமடைவது, அந்நாட்டு மக்கள் இறைவழியில் அளித்துக் கொள்ளும் நன்கொடைகளின் அடிப்படையிலாகும். அவர்களின் நிலை எப்போதும் முன்னேற்றமடைந்துவரும். நமது சமுதாயம் (ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம்)முன்னேற்றமடைய வேண்டும். மற்று நாடுகளில் அது பரவி வருகின்றது. அங்கெல்லாம் அவர்கள் தீவிரமான வறுமையை எதிர் கொண்டு வருகின்றனர்.

அல்லாஹ்வின் வழியில் உதவி புரிவதற்கும், ஏழை நாடுகளுக்கு உதவி அளிப்பதற்கும் நான் உங்களிடம் பலமுறை கூறியிருந்தேன். ஒவ்வொருவரும் அவர்களால் இயன்ற வரையில் நிதி தியாகத்தில் பங்கேற்க வேண்டும்.(அவர்களின் தகுதிக்கு அப்பாறானதை செய்வதற்கு அல்லாஹ் கட்டளை விடுக்கவில்லை) இத்தகைய ஏழை இராஜியங்களின் பொருளாதார நிலைக்கு மாற்றத்தை ஏற்படுத்த அல்லாஹ்வுக்கு முடியும். மிக நல்ல முறையில் அக்காரியங்களில் ஈடுபட்டுக் கொள்ள அல்லாஹ் நமக்கு உதவிபுரியட்டும். இதர இராஜியங்கள் விஷயத்திலும் நம்மால் இயன்ற வரையில் நிதி தியாகம் செய்வதற்கு அல்லாஹ் நமக்கு துணை புரியட்டும்.

இறைவழியில் நிதி தியாகம் செய்கின்றவர்களின் செல்வத்தை அல்லாஹ் அதிகரிக்கச் செய்கின்றான் என திருக்குர் - ஆன், அதன் மாபெரும் ஞானத்தால் நம்மை கற்பிக்கின்றது. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் முஸ்லீம்கள் கடுமையான வறுமையில் வாழ்ந்து வந்தனர். அன்னாரும் அன்னாரின் மனைவிகளும் கூட பசி மூலம் மிக கவலையடைந்திருந்தனர். அவர்கள் மெக்காவில் மிக மரியாதைக்குரிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அவ்வேளையில் சிறுபான்மையான முஸ்லீம்களிடமே செல்வங்கள் இருந்தன. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் கொண்டு வந்த தூதுச்செய்தியை ஏற்றுக்

கொண்டவர்களும், அதை பின்பற்றிக் கொண்டவர்களும் தாம் உண்மையான செல்வந்தர்கள்.

மெக்காவிலிருந்து மதினாவில் குடி பெயர்ந்தப் பிறகும் அவர்கள் கிட்டத்தட்ட அதே நிலைமையில் தான் இருந்தனர். பிறகு சில வருடங்களுக்கு பின் அல்லாஹ் அவர்களின் மனைகளை செல்வங்களைக் கொண்டு குவித்தான். வரலாற்றில் இத்தகையிலான மிகப் பெரிய ஒரு மாற்றத்தை வேறு எங்கும் பார்க்க இயலாது. மசூதிகளை தங்கத்தால் அலங்கரிப்பது இஸ்லாமிய போதனைகளல்ல. முஸ்லீம் ஆட்சியாளர்களிடமும் மற்றும் அரசாங்கத்திடமும் ஏராளமான செல்வங்கள் வந்தடைந்த நேரத்தில், அவர்கள் ஏழைகளுக்கு உதவி செய்தப் பிறகும் செல்வங்கள் மேலும் குவிந்துக் கொண்டிருந்தது. அவ்வேளையில் அந்த செல்வங்களைக் கொண்டு என்ன செய்ய வேண்டும் என தெரியாத சூழ்நிலை வந்தடைந்தது. அவ்வேளைகளில் பல்கலைக்கழகங்களை கட்டியெழுப்புதல் மற்றும் பொருளாதாரத்தை பல வழிகளில் மேம்படுத்தல் போன்றவைகளில் அவர்கள் ஈடுபட்டனர். எல்லா செல்வங்களும் இறைவனின் கரங்களிலாகும். அவன் தேவையற்றவனாகயிருக்கின்றான். ஆனால் நாம் தேவையுடையவர்களாக இருக்கின்றோம்.

இஸ்லாமின் ஆரம்ப காலங்களில் அரேபியாவில் மிக குறைவான செல்வந்தர்கள் மட்டுமே இருந்தனர். அதனால் தான் பெரும்பான்மை மக்களும் பொருள்த்தியாகம் செய்வது மிக அரிதாகயிருந்தது. பிறகு அவர்களுக்கு அல்லாஹ் மிக அதிகமாக செல்வங்களை அளித்துக் கொண்டான். உலகில் வைத்து முற்றிலும் அதிகம் செல்வமுள்ள நகரமாக “பாஹ்தாத்” மாறிக் கொண்டது. இவ்விஷயத்தை ஒரு உதாரணமாக நான் சுட்டிக் காட்டியதாகும். அல்லாஹ்வின் வழியில் நிதி தியாகம் செய்தால் செழிப்பும் வெற்றியும் வந்தடையும். இறைவழியில் நிதி தியாகம் செய்வதில் மதநாடுகள் தோல்வியடைந்து விட்டால், அவர்களை வறுமையைக் கொண்டு இறைவன் தண்டிப்பான். இவ்விஷயத்தில் அதாவது இறைவழியில் அவர்கள் செலவு செய்து கொண்டால் அந்நேரம் அல்லாஹ் அவர்கள் மீது செழிப்பையும் செல்வத்தையும் பொழிந்துக் கொள்வான். இந்த இரகசியத்தை நாம் நன்கு புரிந்துக்கொண்டு தேசிய அளவில் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு நாம் இதனை நடை முறையில் கொண்டு வர வேண்டும்.

நீங்கள் ஒருவர்க்கு நன்மை செய்யும் போது, பலனை எதிர்பார்த்து செய்யாமலிருங்கள் என திருக்குர் - ஆன் நம்மை கற்பிக்கின்றது. நமது தியாகங்கள் இறைவனுக்காக மட்டும் இருக்க வேண்டும். அது ஒரு சிறிய நன்கொடையாக இருந்தால் கூட! அதை அவர் ஏற்றுக் கொண்டால் அதுவே நமது

பாக்கியமும் வெகுமதியுமாகும். தேசிய அளவிலான தியாக மனப்பான்மையிருப்பவர்களின் கடமையானது, தேசத்தின் நன்மைக்காக தியாகங்கள் செய்வதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதாகும். நிதி தியாகம் என்பது ஒரு மறு மருந்தாகும். கடந்த காலங்களில் அதை மிக நன்கு சோதித்து பார்த்த ஒன்றாகும். குறிப்பாக அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களின் காலத்தில்! பின்னர் அம்மண்ணில் அல்லாஹ் அருள்களை பொழிந்தான். பிறகு கோடிக்கணக்கிற்கான ரூபாவின் மதிப்புள்ள எண்ணைகள் பெற்றுக் கொள்ளும் பகுதியாக அவ்விடம் பரிணமித்தது. அவர்களின் முந்தைய தியாகங்களின் விளைவாகவே இவையாவும் கிடைத்தது.

அல்லாஹ்வின் உண்மையான அனைத்து மதங்களுடையவும் ஒரு சட்டமாகயிருக்கின்றது, அல்லாஹ்வின் வழியில் எவர் ஒருவர் நிதி தியாகம் செய்ததுண்டோ அவருக்கு மிக அதிகமளவிற்கு செல்வங்கள் வந்து சேர்ந்ததுண்டு. சில ஏழையான நாடுகளில், மிக வறுமையுடன் இருக்கும் பகுதிகளை சார்ந்தவர்களில் கூட நிதி தியாக மனப்பான்மை இருக்கின்றது என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாகும். அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதற்கான வேண்டுகோளுக்கு அவர்கள் பதிலளிக்கின்றனர். நமது அனைத்து உறுப்பினர்களும் அவர்களின் திறனுக்கு ஏற்றவாறு செலவு செய்திருந்தால் ஏழை நாடுகளுடையவும் நமது ஜமா அத்தினுடையவும் மற்றும் அவர்களுடையவும் நிலைமை மிக நன்றாக பரிணமித்திருந்திருக்கும். இன்ஷா அல்லாஹ்! இவ்விடத்திலாகும் அவர்களின் எல்லா வகையான பொருளாதார பிரச்சனைகளுக்கும் மற்றும் பிற பிரச்சனைகளுக்கும் தீர்வு குடிக்கொள்வது. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதற்கு மக்கள் கற்க வேண்டும். வறுமையை அழித்துக் கொள்வதற்கும் எல்லா வகையான பிரச்சனைகளையும் கவலைகளையும் கடந்து செல்வதற்குமான வழியும் இதுவாகும். இன்று நான் என் பேருரையை முடித்துக் கொள்கின்றேன். வருகின்ற வெள்ளிக் கிழமையும் இவ்விஷயத்தை தொடர்ந்து பேசிக்கொள்வதற்கான “தௌபீக்” வழங்கிட எல்லாம் வல்ல அல்லாஹ்விடத்தில் நான் பிராத்தனைச் செய்கின்றேன். இன்ஷா அல்லாஹ்.

நிதி தியாகத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து நன்கு உணர்ந்துக் கொள்வதற்கான ஆற்றலை வழங்கி அல்லாஹ் உங்களை ஆசீர்வதிப்பானாக! அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வது மூலம் நீங்கள் ஒரு போதும் வறுமையடைவதில்லை என்ற உண்மையை நீங்கள் மிக நன்கு உணர வேண்டும். நீங்கள் செல்வந்தர்களாகயிருந்தாலும் சரி அல்லது ஏழையாகயிருந்தாலும் சரி, அதல்லது நடுத்தரத்தைக் கொண்டவர்களாகயிருந்தாலும் சரி, நீங்கள் இறை வழியில் செலவு செய்வது மூலம் நீங்கள் ஒரு அழகான வாழ்க்கை வழியைத்

தான் திறந்துக் கொள்கின்றீர்கள். அது உங்களின் பாதுகாப்பிற்கான வழியாகும். அது அமைதியின் வழியாகும். அது நம்பிக்கையின் வழியாகும். அல்லாஹ்விடம் அனைத்தையும் ஒப்படைத்துக் கொள்வதன் வழியாகும். அது மூலம் நீங்கள் அல்லாஹ்வின் இரக்கத்தினுடையவும் செல்வத்தினுடையவும் கஜானாவை திறந்துக் கொள்கின்றார்கள். நீங்கள் எதிர்பாராமலிருக்கும் வேளையில் அதை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். அல்லாஹ் திருக்குர் - ஆனில் கூறுக்கின்றான். **“தங்கள் செல்வத்தை இறைவழியில் செலவிட்டுப் பின்னர் எவ்வகையிலும் உபகாரத்தை நினைவூட்டாமலும் எவ்விதத்திலும் துன்பத்தைக் கொடுக்காமலும் இருப்போருக்கு அவர்களின் கூலி அவர்களின் இறைவனிடம் உண்டு. அவர்களுக்கு எவ்வித அச்சமும் ஏற்படாது. அவர்கள் கவலையடையவும் மாட்டார்கள்”** (2:262)

**“உங்களால் இயன்றவரை நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி செவிசாய்த்துக் கீழ்ப்படிந்து (அவனது வழியில்) செலவு செய்யுங்கள். இது உங்களுக்கு மிக நல்லதாகும். தங்கள் உள்ளத்தின் கருமித்தனத்திலிருந்து காப்பாற்றப் படுபவர்களே வெற்றி பெறுபவர்களாவர்”**(64 :17)

அல்லாஹ்வின் வழியில் நிதி தியாகங்களை செய்வதற்கான பகுத்தறிவை அவன் உங்களுக்கு வழங்கட்டும். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் முன்னேற்றத்திற்கான வழிகள் உலகெங்கும் திறக்கட்டும். உங்கள் அனைவரையும் விட ஏழையாகயிருக்கும் மக்களைக் குறித்து நினைப்பவர்களுக்கு அல்லாஹ் உதவி புரியட்டும்! ஆமீன்.

**Translated by:**

*Azim Ahmad*
**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Issued by:**

**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**
**Email:** jamal.raother@gmail.com
**Phone:** 9447001832, 04752252663